# திருக்கோணமலை அலஸ்தோட்டம்

# அருள்மிகு தான்தோன்றி

# ஸ்ரீ நாககன்னி அம்மன்

# ஊஞ்சல் பாடல்கள்



ஆக்கம்

கவிஞர், சோதிடர்

**வி. சிகண்டிதாசன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோணமலை அலஸ்தோட்டம்
# அருள்மிகு தான்தோன்றி ஸ்ரீ நாககன்னி அம்மன்
# ஊஞ்சல் பாடல்கள்

அழகான திருமலை அலஸ்தோட்டம் தன்னில்
அருள்மிகு தான்தோன்றி நாககன்னித் தாய் மேல்
வழமைகள் மாறாமல் ஊஞ்சலிசை பாட
வளமான தமிழினில் வார்த்தை வளம் சேர
பழம் பெரும் கோணேசர் பார்வதியின் மூத்த
பாலகனாய் பிறந்திந்த பாரெல்லாம் ஆண்டு
கழலடி பணிவோர்கள் கவலையைப் போக்கும்
கரிமுகன் பொற்பாதம் காப்பதாய் ஆக 01

வேதங்கள் நான்குமே கயிறாக விளங்க
மேலான இவ்வையம் பலகையெனத் துலங்க
மாதங்கள் யாவுமே மலர்தூவி வாழ்த்த
வானவர்கள் முனிவர்கள் வாழ்த்தி உனைப்போற்ற
பாதகமில்லாமல் பணிவோர்க்கு அருளி
பரிவுடைய நாகமென பௌர்ணமியாய் மிளிரும்
ஆதன திருமலை அலஸ்தோட்டம் வாழும் - ஸ்ரீ
நாககன்னி அன்னையே ஆடீர் ஊஞ்சல் 02



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூந்தென்றல் புதுமையாய் சாமரம் வீச
பூதங்கள் ஐந்துமே பணிந்து பணிசெய்ய
மாந்தர்கள் அருள் நாடி மலரடியைத் தேட
மங்கையர்கள் தீபங்கள் ஏற்றியுனை வணங்க
காந்தமாய் அடியவரை கவர்ந்தருள் செய்து
கண்கண்ட தெய்வமென காட்சி அருள் தந்து
ஈந்தநல் திருமலை அலஸ்தோட்டம் வாழும் - ஸ்ரீ
நாககன்னி அன்னையே ஆடீர் ஊஞ்சல் 03

தவரஞ்சன் கனவிலே தானாகத் தோன்றி
தரிசனம் காட்டியே திருவருளைப் புரிந்தாய்
நவசோதி வடிவமே நாகரூபிணியே
நம்பிடும் அடியார்க்கு நலம்தரும் செல்வியே
சிவனாரின் அருளோடு சீர்தரும் தேவியாய்
சிவசக்தி வடிவமாய் விழங்கிடும் முதல்வியாய்
கவருமுயர் திருமலை அலஸ்தோட்டம் வாழும் - ஸ்ரீ
நாககன்னி அன்னையே ஆடீர் ஊஞ்சல் 04

பால்பழம் தேன் கொண்டு அபிஷேகம் செய்வோர்
பாவங்கள் போக்கிடும் பவதாரணியாய்
வேல்கொண்ட வேலவன் விநாயகரோடு
வேதனையை மாற்றிடும் வேதரூபிணியாய்
நாள்தோறும் தேடியே நற்பணி செய்வோர்
நலங்களைக் காத்திடும் நாகநந்தினியாய்
ஆள்கின்ற திருமலை அலஸ்தோட்டம் வாழும் - ஸ்ரீ
நாககன்னி அன்னையே ஆடீர் ஊஞ்சல் 05



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளியுடன் செவ்வாய் பௌர்ணமியும் வந்து
விளக்கேற்றி வணங்குவோர் வினைதுயரைக் களைந்து
அள்ளியருள் செய்கின்ற ஆனந்த வல்லியாய்
அழகான நடனமிடும் அபிராமி நீலியாய்
புள்ளியுடை அணிந்த நல் பூலோக செல்வியாய்
புவிமாந்தர் புரிந்திடா புதுமையின் புதல்வியாய்
தெள்ளிய திருமலை அலஸ்தோட்டம் வாழும் - ஸ்ரீ
நாககன்னி அன்னையே ஆடீர் ஊஞ்சல் 06

தாழம்பூ வாசனையில் தான்மகிழும் சேயாய்
தாலாட்டும் கடலிசையில் தலையாட்டும் கொடியாய்
வாழவரும் அடியார்க்கு வழிகாட்டும் தாயாய்
வழிமாறும் தீமைகளை வதம் செய்யும் தீயாய்
ஈழமணித்திருநாட்டில் இலங்குமொரு மணியாய்
இன்னல்பிணி அகற்றியே இதம்தரும் கனியாய்
சூழல்மிகு திருமலை அலஸ்தோட்டம் வாழும் - ஸ்ரீ
நாககன்னி அன்னையே ஆடீர் ஊஞ்சல் 07

வினைதீர்க்கும் வேப்பையினை விருட்சமாய்ப் பெற்று
விளையாட வெள்ளைமணல் வீதியினை ஏற்று
தனைநாடும் அடியவரைத் தாங்கி அரவணைத்து
தீராத நோய்பிணி தீவினையை மாய்த்து
உனைப்பாடும் உயர்ந்தோர்கள் உளத்தில் குடியமர்ந்து
உனக்கான பூசைபணி தேவைகளில் மகிழ்ந்து
பனைகள்நிறை திருமலை அலஸ்தோட்டம் வாழும் - ஸ்ரீ
நாககன்னி அன்னையே ஆடீர் ஊஞ்சல் 08



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளமை எழில் குன்றாத இன்பங்களாட
இதமான அலங்கார அணிகலங்களாட
வளமான இயற்கை எழில் வண்ணங்களாட
வற்றாத கடலலை கானங்கள் பாட
தளமான சங்கோடு சக்கரமுமாட
தனக்காக இசைமேள தாளங்கள் முழங்க
அளப்பெரும் திருமலை அலஸ்தோட்டம் வாழும் - ஸ்ரீ
நாககன்னி அன்னையே ஆடீர் ஊஞ்சல் 09

அலஸ்தோட்ட நாககன்னி அன்னையருள் வாழி
ஆதியாம் சைவநெறி அறநூல்கள் வாழி
நலம்தரும் தெய்வங்கள் நல்லடியார் வாழி
நீதிநெறி தவறாமல் நிலமாந்தர் வாழி
தலம்தந்த தலைவருடன் சார்ந்தவர்கள் வாழி
திருப்பணி செய்துவரும் தொண்டர்களும் வாழி
துலங்கிடும் பூசைபணி செய்வோரும் வாழி
தெய்வ அருட்பாடல்களை தருவோரும் வாழி 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எச்சரிக்கை

நாககன்னி என்றே நலம் அருள்வாய் எச்சரிக்கை
நாடும் அடியார்கள் வினை தீர்ப்பாய் எச்சரிக்கை
ஏகனருள் பெற்றதிரு அணங்கே எச்சரிக்கை
ஏற்றங்களைத் தந்து எமக்கருள்வாய் எச்சரிக்கை

ஆதிசக்தி வடிவிலொரு வடிவே எச்சரிக்கை
அவனியெலாம் ஆண்டு அருள்புரிவாய் எச்சரிக்கை
சோதியெனத் தோன்றும் ஒளிச்சுடரே எச்சரிக்கை
சுகமாய் சங்கு சக்கரமும் தரித்தாய் எச்சரிக்கை

திருமலையின் அலஸ்தோட்டத்து தேவி எச்சரிக்கை
பெருமைமிகு தலத்தில் நலம் பெற்றாய் எச்சரிக்கை
கருணைமிகு அழகிலுயர் கனியே எச்சரிக்கை
விருட்சமென வேப்பநிழல் கொண்டாய் எச்சரிக்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பராக்கு

தான்தோன்றி நாககன்னி தாயே பராக்கு
திருமலை அலஸ்தோட்ட அருளே பராக்கு
நான்மறைகள் போற்றிடும் நீலி பராக்கு
நடனமிடும் ஆனந்த நளினி பராக்கு

வேம்புதனை விருட்சமாய் பெற்றாய் பராக்கு
வினைதீர்த்து அடியவரைக் காப்பாய் பராக்கு
சாம்பசிவம் அணிகலம் ஆனாய் பராக்கு
சக்தியின் அங்கமெனத் திகழ்வாய் பராக்கு

ராகுகேது தோஷவினை தீர்ப்பாய் பராக்கு
ரம்மியமான பெரும் கடலே பராக்கு
போகும் வழி காட்டியருள் புரிவாய் பராக்கு
பூரணை நிலவான புகழே பராக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லாலி

லாலி லாலி லாலி லாலி லாலி
நாககன்னித் தேவியே லாலி லாலி

அலஸ்தோட்டம் அமர்ந்தவளே லாலி லாலி
அருள்வாரித் தருபவளே லாலி லாலி
நலங்கள் மிகு நந்தினியே லாலி லாலி
நாதவடிவானவளே லாலி லாலி

தாழம்பூ வாசகியே லாலி லாலி
தாங்கியெமைக் காப்பவளே லாலி லாலி
வாழவழி செய்பவளே லாலி லாலி
வண்ணமிகு பூங்கொடியே லாலி லாலி

புற்றுறையும் பூரணியே லாலி லாலி
பலவடிவக் காரணியே லாலி லாலி
கற்றுயர வைப்பவளே லாலி லாலி
கவிபாடச் செய்தவளே லாலி லாலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மங்களம்

மங்களம் மங்களம் மங்களம் - ஜெய ஜெய
மங்களம் மங்களம் மங்களம்

கங்காதரன் பார்வதிக்கும் கணபதிக்கும் கந்தனுக்கும்
மங்கள வாழ்வருளும் மாதவர்க்கும் மாருதிக்கும்
இங்குயர்ந்த மூர்த்தியர்க்கும் இன்னும் பல ஞானியர்க்கும்
எங்குமுயர்வாக நிற்கும் எட்டுத்திசை காவலர்க்கும்
(மங்களம்)

அலஸ்தோட்டப் பதியில் வாழும் அன்னை நாககன்னியர்க்கு
நலங்கள் நல்கும் வைரவர்கும் நல்லடியார் யாவருக்கும்
தலமளித்த தலைவருக்கும் தர்மகர்த்தா சபையினர்க்கும்
துலங்கவைக்கும் பூசகர்க்கும் தொண்டருக்கும் அன்பருக்கும்
(மங்களம்)

ஆக்கம்
கவிஞர், சோதிடர்
வி.சிகண்டிதாசன்
29.06.2023



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org